
## தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

## துணை முதலமைச்சர், திமுக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமை!

# திருவண்ணாமலையில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் சந்திப்பு கூட்டத்தில் பங்கேற்கும் சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் – மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் ஆலோசனை வழங்குகிறார்!



கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் வருகின்ற 14.12.2025 ஞாயிறு அன்று திருவண்ணாமலை, கலைஞர் திடலில் தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றும், தி.மு.க. இளைஞர் அணி வடக்கு மண்டல நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்கும் சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம் இன்று (7.12.25, ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணி முதல் சென்னை, சைதாப்பேட்டை பஜார் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ். குணசேகரன் தலைமையில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் AMV. பிரபாகரராஜா எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெறும் ஆலோ சனைக்கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைகள் வழங்குகிறார்.

எனவே இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள் பகுதி ஒன்றிய கழக செயலாளர்கள் மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் பகுதி ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் துணை அமைப்பாளர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அமைச்சர் **மா.சுப்பிரமணியன்**
**செயலாளர் - சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.**

## தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கு மேலும் வித்திடும் வகையில்

# மதுரை மேலமடை சந்திப்பு சாலையில் புதிய மேம்பாலத்திற்கு வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம் என பெயர் சூட்டல்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, டிச.7-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரையில் உள்ள திருநகர் மேலமடை சந்திப்பில் ரூ.150.28 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள புதிய மேம்பாலத்தை இன்று (07.12.2025) திறந்து வைக்கிறார். இந்த மேம்பாலத்திற்கு வீரமங்கை வேலுநாச்சியார் மேம்பாலம் என்று பெயர் சூட்டப்படும் என அறிவித்துள்ளார்.**



மதுரை தொண்டி சாலை அண்ணா பேருந்து நிலைய சந்திப்பில் தொடங்கி ஆவின் சந்திப்பு, மேலமடை சந்திப்பு வழியாக மதுரை சுற்றுச் சாலையில் இணைந்து அதன் தொடர்ச்சியாக சிவகங்கை மாவட்டம் பூவந்தியில் முடிவடைகிறது. இச்சாலை மதுரை மாவட்டத்தையும், சிவகங்கை மாவட்டத்தையும் இணைக்கும் முக்கிய மாநில நெடுஞ்சாலை ஆகும். இச்சாலையில் அதிகமான கல்வி நிறுவனங்கள் அமையப்பெற்றுள்ளது,

மேலும் போக்குவரத்துச் செறிவு அதிகமாக உள்ள காரணத்தினால் இப்பகுதியில் உள்ள மூன்று சந்திப்புகளிலும் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருக்கும் சூழ்நிலை நிலவிவந்தது. பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமத்தை போக்கும் வகையிலும் நெரிசலின்றி வாகனங்கள் செல்லும் வகையிலும் இந்த மேம்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தால் மதுரை தொண்டி சாலை, கோரிப்பாளையம் முதல் சுற்றுச் சாலை வரை போக்குவரத்து நெரிசல் வெகுவாகக் குறையும்.

950 மீட்டர் நீளமுள்ள இந்த முக்கியமான மேம்பாலத்திற்கு சிவகங்கை மாவட்டத்தில் வெள்ளையரை எதிர்த்து வீரப்போர் புரிந்து வெள்ளையரிடம் இருந்து சிவகங்கையை மீட்டு சிறப்பான ஆட்சி புரிந்த வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் பெயர் சூட்டப்படும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

# நாடு முழுவதும் மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த தனி சட்டம்!

## மாநிலங்களவையில் தனி நபர் மசோதாவை டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு அறிமுகம் செய்தார்!

புதுடெல்லி, டிச.7-

பெண்களின் ஆரோக்கியத்துக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக விளங்கும் மார்பகப் புற்றுநோயை உரிய நேரத்தில் கண்டறிந்து, சிகிச்சை அளிக்கவும், அதுகுறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உரிய சட்டம் கொண்டு வருவதற்காக தனிநபர் மசோதாவை மாநிலங்களவையில் அறிமுகம் செய்தார் தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு.

மார்பகப் புற்றுநோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை சட்டம் 2025 என்ற தலைப்பில் அவர் அறிமுகம் செய்த தனிநபர் மசோதாவில் இடம்பெற்றுள்ள அம்சங்கள்:

உலகம் முழுக்க வாழும் பெண்களுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக விளங்குவது மார்பகப் புற்றுநோய் ஆகும். புற்றுநோயால் பாதிக்கப்படும் பெண்களில் நான்கில் ஒருவர் மார்பகப் புற்றுநோய்க்கு ஆளாகிறார். தென்கிழக்கு ஆசிய நாடுகளில் 2040 ம் ஆண்டு வாக்கில் மார்பகப் புற்றுநோயால் உயிரிழக்கும் பெண்களின் எண்ணிக்கை 64 சதவிகிதம்



உயரும் ஆபத்து இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவிலும் இந்த நோயின் தாக்கம் அதிகரித்து வருகிறது.

2023 ம் ஆண்டில் மட்டும் இந்தியாவில் 2.12 லட்சம் பெண்கள் மார்கப் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் தெரிவித்துள்ளது. 20 முதல் 30 வயது வரையிலான பெண்களிடையே இந்நோய்க்கான அறிகுறிகள்தோன்றி 50 முதல் 65 வயது வரைக்குள்ளாக அதன் தீவிரத்தன்மையை அடைகிறது. இந்தியப் பெண்களில் தங்கள் வாழ்நாளில் 29 சதவிகிதத்தினர் மார்பகப் புற்றுநோய்க்கு ஆளாகிறார்கள். இந்த ஆண்டில் அக்டோபர் 2025 வரையிலான காலகட்டத்தில் இந்தியாவில் 2,52, 108 பெண்கள் இந்நோயின் தாக்கத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

இந்நோய் குறித்த விழிப்புணர்வு இல்லாததும், சுய பரிசோதனை செய்துகொள்வதில் உள்ள தயக்கம் காரணமாகவும் நோய் முற்றிய நிலையிலேயே பெண்கள் இந்த பாதிப்பு பற்றி தெரிந்து கொள்கிறார்கள். இதனால் சரியான சிகிச்சையை உரிய நேரத்தில் பெற முடியாமல் போகிறது.

இந்த சட்டம் நிறைவேறுவதன் மூலம் மார்கபகப் புற்று நோயிலிருந்து இந்திய இளம்பெண்களைப் பாதுகாக்கும் வகையில், மத்திய மாநில அரசுகள் இணைந்து, இலவசப் பரிசோதனை மற்றும் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யலாம். நகர் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ளூர் அதிகாரிகள் மற்றும் அரசு அமைப்புகள் மூலமாக இலவச மருத்துவ முகாம்கள் நடத்தி இலவசமாக மருந்துகளை வழங்கலாம். மம்மோகிராபி போன்ற சோதனைகளை அனைத்துத் தரப்பு பெண்களும் இலவசமகப் பெற வழி ஏற்படும்.

இன்னொரு அம்சமாக மார்பகப் புற்றுநோயின் அறிகுறிகளை தொடக்கத்திலேயே தெரிந்துகொள்ளும் வகையில் நாடு தழுவிய விழிப்புணர்வு முகாம்களை நடத்த வேண்டும். பாதிக்கப்படும் பெண்கள் அரசு மருத்துவ மனைகளில் இலவசமாக சிகிச்சை பெற வாய்ப்பு கிடைக்கும்.

இந்த மசோதா, சட்டமாக நிறைவேறினால் மாநில அரசுகளுக்கு , மத்திய அரசு அவ்வப்போது போதிய நிதியை வழங்கி மேற்சொன்ன மருத்துவ முகாம் ஏற்பாடுகள் மற்றும் இலவச சிகிச்சைகள் அளிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். இத்திட்டத்தைக் கண்காணிக்க மத்திய சுகாதார அமைச்சரின் தலைமையில் தேசிய அளவில் ஒரு நிர்வாகக் குழுவும்; மாநில சுகாதார அமைச்சர்களின் தலைமையில் மாநில நிர்வாகக் குழுக்களையும் அமைக்கலாம். இந்த இரண்டு நிலை குழுக்களும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கூடி விவாதிக்க வழிவகை செய்யப்படும்.

இவை மட்டுமல்ல, இம்மசோதாவில் உள்ள பிற அம்சங்களும் தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களுக்கு உட்பட்டதாகவும், முரண்படாத வகையிலும்வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்த விபரங்கள் அடங்கிய மசோதாவை மாநிலங்களவையின் பரிசீலனை மற்றும்ஒப்புதலுக்காக டாக்டர் கனிமொழி என். வி.என். சோமு தாக்கல் செய்தார்.

இதுதவிர, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக ஒரு தனிநபர் மசோதா, சட்ட விரோத குழந்தைகள் கடத்தல் தடுப்பு தொடர்பாக ஒரு தனிநபர் மசோதா என மேலும் இரண்டு மசோதாக்களையும் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு மாநிலங்களவையில் அறிமுகம் செய்தார்.

## ஒன்றிய கழகப் பொறுப்பாளர் டி.மோதிலால் தலைமையில்

# பூண்டி மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் இளைஞர் எழுச்சி நாள் விழா!

திருவள்ளூர் டிச. 07

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் பூண்டி மேற்கு ஒன்றிய திமுக சார்பில் கழக இளைஞரணி செயலாளர் தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் கிளை கழக நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி ஒன்றிய கழக பொறுப்பாளர் டி.மோதிலால் தலைமையில் இன்று (07-12-2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணி அளவில் பூண்டி பேருந்து நிலையம், காலை 09.30 மணியளவில் எறையூர், மொண்ணவேடு, சித்தம்பாக்கம், இராமதண்டலம், மோவூர், நெய்வேலி, பூண்டி, திருப்பேர்,

10-12-2025 அன்று புதன் கிழமை காலை 9.00 குன்னவலம், எல்லப்பநாயுடு பேட்டை, ராமஞ்சேரி, தோமூர் சென்ராபாளையம், அல்லிக்குழி, பிளேஸ் பாளையம்,

14-12-2025 அன்று காலை 9.00 மணிக்கு திருப்பாச்சூர், சிறுவானூர், கைவண்டூர், பாண்டூர், நெமிலி அகரம், பட்டரை பெரும்பதூர், காரணி நிசாம்பட்டு, ஆகிய ஊராட்சிகளில் இளைஞர் எழுச்சி நாள் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதில் அமைச்சர் ஆவடி சா.மு நாசர் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள் இதில் பொதுக்குழு உறுப்பினர் ப.சிட்டிபாபு, முன்னாள் ஒன்றிய செயலாளர் டி. கிறிஸ்டி (எ)அன்பரசு, ஒன்றிய நிர்வாகிகள் கே, பாஸ்கரன், இ.லட்சுமணன், அ. ஆனந்த்ராஜ், சித்ரா ரமேஷ், தா. நடராஜன், பி. தேவேந்திரன், ஜி.டில்லி பாபு, சௌகார்பாண்டியன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்


## நம் முகமும் முகவரியும்

தலைமைக்கழக அனுமதிபெற்றது

தலைமைக்கழக நிர்வாகிகள், அமைச்சர் பெருமக்கள், மாவட்டக்கழக செயலாளர்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளி மாநில அமைப்பாளர்கள், அனைத்து அணிச்செயலாளர்கள், இளைஞர் அணிச்செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய / நகர / பகுதி / பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் சொற்பொழிவாளர்களின் அலைபேசி எண்களுடன் கூடிய முகவரிநூல் வெளிவந்துள்ளது.

கழக நிர்வாகிகளிடம் இருக்க வேண்டிய கழக அலுவலகங்களில் இருந்திட வேண்டிய மிக மிக முக்கியமான முகவரி நூல் ...



பக்கம் 536
விலை 500/-

நூலினை வங்கி மூலம் பெற :
அ. கூத்தரசன்
A/c. No. : 1262101017751
IFSC : CNRB0001262
கனரா வங்கி, கூடலூர் பிராஞ்ச்
கோவை - 20
செல் : 94863 24163

தொடர்பு கொள்ள
திருப்பூர் கூத்தரசன்
அன்னை அஞ்சுகம் பதிப்பகம்
153/1, சாமையன் நகர்,
எஸ்.ஆர்.கே.வி. அஞ்சல்
பெரியநாயக்கன்பாளையம்
கோவை - 641020
செல் : 94863 24163


## திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர்

# பூண்டி கே.கலைவாணன் சகோதரி திருமதி பா.கலைவாணி மறைவு!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, டிச.7-**

**திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணனின் சகோதரி திருமதி பா. கலைவாணி அம்மையார் அவர்கள் நேற்று (6.12.2025) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

தகவல் அறிந்து துயருற்று கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த செய்தியில்,

“மறைந்த பூண்டி கே.கலைச்செல்வம், திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன், (நினைவில் வாழும்) பூண்டி கே.கலையரசன் ஆகியோரின் சகோதரியும் – (நினைவில் வாழும்) ஜி.பாண்டி துரை அவர்களின் துணைவியாருமான திருமதி. பா.கலைவாணி அம்மையார் அவர்கள், நேற்று இயற்கை எய்தினார் எனும் செய்தியறிந்து பெரிதும் வருந்துகிறேன்.

கலைவாணி அம்மையார் அவர்களின் மறைவால் ஆற்றொணாத் துயருறும் அவரது புதல்வர்களான சுந்தரேஷ்வரன், விக்னேஷ்வரன், சகோதரர் – மாவட்டச் செயலாளர் பூண்டி கே. கலைவாணன் உள்ளிட்ட குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும் – அன்னாரின் மறைவுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

## “ஆஃப்டர் நூன்” – ‘பிற்பகல்’ நாளிதழ்களின் ஆசிரியர்

# எம்.என்.சுதன் அப்பாதுரை மறைவு!

## முதல்வர் மு.க. ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, டிச.7-**

**“ஆஃப்டர் நூன்” மற்றும் ‘பிற்பகல்’ ஆகிய இதழ்களின் ஆசிரியர் எம்.என்.சுதன் அப்பாதுரை அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள செய்தியில்,

“கோவை பத்திரிகையாளர்கள் சங்கத் தலைவரும் – “ ‘Afternoon’ மற்றும் ‘பிற்பகல்’ ஆகிய நாளிதழ்களின் ஆசிரியர் மற்றும் பதிப்பாளருமான எம்.என்.சுதன் அப்பாதுரை அவர்கள் இயற்கை எய்தினார் எனும் செய்தி அறிந்து வருந்துகிறேன்.

சுதன் அப்பாதுரை அவர்கள் பத்திரிகைத் துறையில் நீண்ட நெடிய அனுபவம் கொண்டவர். அவரது மறைவு பத்திரிக்கை உலகிற்கு ஓர் இழப்பு எனின் அது மிகையல்ல.

அன்னாரை இழந்து துயருறும் – அவரது புதல்வர்கள் ஆதம் அப்பாதுரை, டேவிட் அப்பாதுரை உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.

**R.N. Ravi** — RAJ BHAVAN, Chennai - 600 022.

### GOVERNOR
### TAMIL NADU
### MESSAGE

Ex-servicemen are the valuable asset of the nation, embodying unparalleled discipline, resilience and unwavering dedication that transcend their years of active duty. While in active service they safeguarded our nation's sovereignty and integrity with exceptional courage, commitment and professionalism, endured hardships on the most difficult and challenging fronts, In times of crisis-be it natural disaster like floods, cyclones and earthquake, they rise against all odds and provide critical rescue and relief services to the affected people. They do so putting their lives at stake. After retirement they remain proud assets of the nation with their service to the society in various capacities as disciplined citizens of the country.

It is the solemn responsibility of our society to understand, support our ex-servicemen, Veer Naris and their families with a profound sense of kinship. On Armed Forces Flag Day, each act of generosity toward the Armed Forces Flag Day Fund renews our shared pledge to safeguard their welfare, dignity and honor. Standing beside our veterans is far more than mere expressions of gratitude; it is a profound duty that sustains the very foundation of Bharat as a family.

**(R.N. Ravi)**

### கொடி நாள்
### 07.12.2025

**முன்னாள் படைவீரர்கள் / சார்ந்தோர்களுக்கு 2024-25 ஆம் ஆண்டில் பல்வேறு நிதியின் கீழ் வழங்கப்பட்ட நிதியுதவிகள் விவரம்**

| வ. எண். | நிதி உதவிகளின் விபரம் | பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|
| 1. | மகன் / மகள்களை இராணுவப் பணிக்கு அனுப்பிய பெற்றோருக்கு ஊக்க மானியம் / இராணுவத்தில் அலுவலர்களாக சேரும் முன்னாள் படைவீரர்களின் சிறார்களுக்கு தொகுப்பு மானியம் | 116 | 33,12,000 |
| 2. | வீர விருது மற்றும் போற்றத்தக்க பணிப் பதக்கம் பெற்றவர்களுக்கான பண முடிப்பு | 25 | 13,42,000 |
| 3. | போரில் உயிரிழந்தோர் குடும்பத்தினர் / ஊனமுற்றோருக்கு வருடாந்திர பராமரிப்பு மானியம் மற்றும் கருணைத் தொகை | 514 | 1,95,80,000 |
| 4. | தொழுநோய் / புற்றுநோய் / காசநோய் நிவாரண நிதியுதவி | 470 | 3,21,34,000 |
| 5. | பார்வையற்றோர் / பக்கவாதம் / மனநலன் குன்றியோர் / மனநலன் பாதிக்கப்பட்டோர் மற்றும் மாற்றுத்திறனாளிக்கான நிதியுதவி / பக்கவாத மையம் பூனேவில் தங்கும் ஊனமுற்ற முன்னாள் படைவீரர்களுக்கு நிதியுதவி. | 1192 | 7,90,99,300 |
| 6. | மாதாந்திர ஆயுட்கால நிதியுதவி (முன்னாள் படைவீரர்கள்/கைம்பெண்கள்) | 962 | 4,09,57,000 |
| 7. | இரண்டாம் உலகப்போர் ஆயுட்கால நிதியுதவி (முன்னாள் படைவீரர்கள் / கைம்பெண்கள்) / நிம்மதி ஓய்வு இல்லத்தில் தங்கிடும் முன்னாள் படைவீரர் மற்றும் அவர்தம் கைம்பெண்களுக்கு பராமரிப்பு கட்டணம் | 1503 | 6,36,96,000 |
| 8. | இலவச தையல் இயந்திரம் / வேலைவாய்ப்பு பயிற்சி மற்றும் தொழில்நுட்ப மானியம் | 74 | 3,70,976 |
| 9. | திருமணம் / செயற்கை உபகரணங்கள் / ஈமச்சடங்கு நிதியுதவி | 5044 | 3,63,96,659 |
| 10. | வீடு கட்டும் / வீட்டுவரி மீளப்பெறுதல் மானியம் | 1766 | 73,63,199 |
| 11. | முன்னாள் படைவீரர்களின் சிறார்கள் கல்வியறிவு மேம்பாட்டு நிதியுதவி மற்றும் IIT, IIM, NLS சைனிக் பள்ளி ஆகியவற்றில் பயிலும் சிறார்களுக்கு உயர்கல்வி ஊக்கத்தொகை | 4960 | 11,19,94,361 |
| 12. | வங்கி கடன் வட்டி மானியம் | 207 | 24,80,642 |
| | மொத்தம் | 16,833 | 39,87,26,137 |

**மு.க.ஸ்டாலின்**
தமிழ்நாடு முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை — 600 009

### கொடி நாள் செய்தி

**படைவீரர் கொடி நாள் 2025 - 7 டிசம்பர் 2025**

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 7–ம் தேதி படைவீரர் கொடிநாளாக கடைப்பிடிக்கப்படுகிறது. நமது நாட்டை பல்வேறு அச்சுறுத்தல்களில் இருந்து பாதுகாப்பதில் படைவீரர்கள் ஆற்றிவரும் தன்னலமற்ற சேவையை நன்றியுடன் இந்நாளில் நினைவு கூர்கிறோம்.

முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு பல்வேறு சமூகப் பொருளாதார நலத்திட்டங்களை விரிவுபடுத்துவதன் மூலம், அவர்களை தமிழ்நாடு அரசு பெருமைப்படுத்தி வருகிறது. மேலும், அவர்களின் மறுவாழ்விற்காக நாம் எடுத்துள்ள முன்னோடி நடவடிக்கைகளும் காக்கும் கரங்கள் போன்ற திட்டங்களும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு பேருதவி புரிகின்றன.

இந்த ஆண்டு டிசம்பர் 7–ம் தேதி அன்று அனுசரிக்கப்படும் கொடிநாள், படைவீரர்களின் அளப்பரிய பணியை மக்களுக்கு நினைவூட்டும் என்பதை அறிந்து நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த இனிய நாளில் முப்படை வீரர்கள் மற்றும் முன்னாள் படைவீரர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களின் சேவைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், கொடிநாள் நிதிக்கு நன்கொடையினை வாரி வழங்கும்படி எனதருமை தமிழ்நாட்டு மக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**(மு.க.ஸ்டாலின்)**
தமிழ்நாடு முதலமைச்சர்

முன்னாள் படைவீரர்களும் அவர்களை சார்ந்தவர்களும் பயன்பெற செயல்படுத்தப்படும் திட்டங்களின் கூடுதல் விவரங்களை அறிய மாவட்டங்களில் உள்ள முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களை தொடர்பு கொள்ளலாம்.

**இணையதளம் :** https://exwel.gov.in

**தொலைபேசி எண் :** 044-26691342 / 26691747

**Online** மூலம் கொடிநாள் நன்கொடை அளிக்க விரும்புவோர் கீழே கொடுக்கப்பட்டுள்ள **QR** குறியீட்டினை **Scan** செய்து **https://flagday.tn.gov.in** இணையதளத்தில் உள்ளீடு செய்து நன்கொடையினை செலுத்திடலாம்.

**நாடு காப்போர் நலம் காக்க வாரி வழங்குவீர் !**

செ.ம.தொ.இ./ 1414 /வரைகலை/2025

இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 600 009.